பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 02 2025 — 12 40
வெள்ளிக்கிழமை — பிற்பகல்

ஆகாஷ்வாணி

***TUNE***

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புத்தபிரானின் போதனைகள் அமைதியான உலகை உருவாக்க வழிகாட்டியாக திகழ்கிறது என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பிரதமரின் அமெரிக்கப் பயணம், இந்திய – அமெரிக்க நட்புறவிற்கு இரு நாட்டுத் தலைவர்களும் அளித்து வரும் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி கூறியுள்ளார்.

3. காசி தமிழ்ச் சங்கமத்தில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்குமாறு மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தமிழகத்தில் அதிகரித்து வரும் வீட்டுவசதி தேவைகளை நிறைவேற்ற புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட இருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி வதோதராவில் இன்று தொடங்குகிறது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

புத்தபிரானின் போதனைகள் அமைதியான வளர்ச்சியடைந்த உலகை உருவாக்க வழிகாட்டியாக திகழ்கிறது என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் நடைபெற்ற இந்து – பௌத்த அமைப்பின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் காணொலி வாயிலாக பேசிய பிரதமர், ஆசியாவின் நூற்றாண்டு பொருளாதார நலன்களுக்காக மட்டுமின்றி சமூக நன்மதிப்புக்கானது என்பதை இந்த மாநாடு பிரதிபலிப்பதாக கூறினார்.

நாம் செல்லும் பாதை மட்டுமே சரியானது என்ற கருத்துதான் மோதலுக்கு வழிவகுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போரால் ஏற்படும் உயிரிழப்புகளும், வேதனைகளும் அனைத்துத் தரப்பினரையும் பாதிப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

கிழக்கை உற்றுநோக்குகள் என்ற இந்தியாவின் கொள்கையும், மேற்கை உற்று நோக்குங்கள் என்ற தாய்லாந்தின் கொள்கையும் பரஸ்பரம் பலனளிப்பதாக கூறிய அவர், இந்தியாவும் - தாய்லாந்தும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆழமான கலாச்சார நட்புறவுகளைக் கொண்ட நாடுகள் என்றும் தெரிவித்தார்.

செழுமையான கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் வரலாற்றைக் கொண்டுள்ள தாய்லாந்து, ஆசியாவின் ஆன்மிகப் பாரம்பரியத்திற்கு சிறந்த உதாரணமாக திகழ்கிறது என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணம், இந்திய – அமெரிக்க நட்புறவிற்கு இரு நாட்டுத் தலைவர்களும் அளித்து வரும் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது என வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி கூறியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அமெரிக்க அதிபராக திரு. ட்ரம்ப் இரண்டாம் முறையாக பதவியேற்ற 3 வாரத்திற்குள் இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதை சுட்டிக்காட்டினார்.

அப்போது பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம், பொருளாதாரம், தொழில்நுட்பம், எரிசக்தி, இருநாட்டு மக்களிடையேயான நேரடி தொடர்புகள் மற்றும் சர்வதேச, பிராந்திய விவகாரங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் பலனளிக்கக்கூடிய வர்த்தக உடன்படிக்கைகள் குறித்து இந்த ஆண்டின் பிற்பகுதியில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதுடன் இரு நாடுகளுக்கும் இடையே 10 ஆண்டு காலத்திற்கான ராணுவ ஒத்துழைப்பு இறுதி செய்யப்பட இருப்பதாகவும் திரு. விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

இதனிடையே பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் புறப்பட்டார்.

<<<>>>

காசி தமிழ்ச் சங்கமத்தில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்குமாறு மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டுள்ளார்.

காசி தமிழச் சங்கமத்தின் மூன்றாம் ஆண்டு நிகழ்ச்சிகள் வாரணாசியில் நாளை தொடங்கி வரும் 24ஆம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற உள்ளது.

இதுகுறித்து திரு. தர்மேந்திர பிரதான் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் ஒன்றுபட்ட பாரதம் - வலிமையான பாரதம் என்ற உணர்வுடன் இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

காசிக்கும் - தமிழகத்திற்கும் இடையிலான காலத்தால் அழியாத கலாச்சார, நாகரிக மற்றும் அறிவாற்றல் பிணைப்புகளை வலுப்படுத்தி கொண்டாடுவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழகத்தில் இருந்து மாணவர்கள், பெண்கள், விவசாயிகள் பல்வேறு தொழில்சார்ந்த வல்லுநர்கள் உட்பட சுமார் ஆயிரம் பிரதிநிதிகளும், நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழக மாணவர்கள் 200 பேரும் பங்கேற்க உள்ளனர்.

அகத்திய முனிவரின் இலக்கியப் பங்களிப்பு குறித்த கண்காட்சி, பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிகளும் காசி தமிழ்ச் சங்கமத்தில் இம்முறை இடம்பெற உள்ளன.

<<<<>>>>

மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி நடப்பதால் ராஜஸ்தான் மாநிலத்தில் ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக மத்திய அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

ஜோத்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இரட்டை எஞ்சின் அரசு ராஜஸ்தானில் கடந்த ஆண்டு தாக்கல் செய்த பட்ஜெட் வரலாற்று சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது என்றார்.

அதேபோன்று இந்த ஆண்டு பட்ஜெட்டும் அனைத்துத் தரப்பினரின் நலன்களையும் உள்ளடக்கியதாகவும், மாநிலத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிப்பதாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதன் மூலம் ராஜஸ்தான் மாநிலம் வளர்ச்சியடைந்து நாட்டின் வளர்ச்சி எந்திரமாக உருவெடுக்கும் என்றும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

<<<<>>>>

கோவை குண்டுவெடிப்பு சம்பவ நினைவு தினத்தையொட்டி, இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

1988ஆம் ஆண்டு இதேநாளில் கோவையில் பிஜேபி மூத்த தலைவர் திரு. எல்.கே. அத்வானி பொதுக்கூட்டத்தில் உரையாற்ற இருந்த நிலையில், அப்பகுதியின் பல்வேறு இடங்களில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில் 58 பேர் உயிரிழந்தனர்.

இதையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த குண்டுவெடிப்பு கோவை மாவட்டத்தின் பொருளாதார சூழலை பல்லாண்டுகள் பின்னுக்குத் தள்ளியதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் நிகழ்ந்து 27 ஆண்டுகள் ஆகும் நிலையில் அதில் உயிரிழந்தோருக்கு தமது அஞ்சலியை செலுத்துவதுடன் உடல் பாதிப்புகளுடன் தற்போதும் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு தமது ஆறுதலை உரித்தாக்குவதாகவும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகம் அதிக அளவில் நகரமயமான மாநிலமாக உருவெடுத்துள்ளதால் மக்களின் வீட்டுவசதி தேவைகளை நிறைவேற்ற புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட இருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று வீட்டுவசதி கண்காட்சியை தொடங்கி வைத்துப் பேசிய முதலமைச்சர், மாநிலத்தில் புதிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ஒற்றைச்சாளர முறையில் அனுமதி வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

<<<<>>>>

திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாததால், உதவியாளர்கள் ஊசி போட்டதன் காரணமாக தென்காசியைச் சேர்ந்த 4 வயது சிறுவன் உயிரிழந்தது, மிகுந்த அதிர்ச்சியளிப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளார்.

பெரும்பாலன உயிரிழப்புகள் போதிய மருத்துவர்கள் இல்லாததால் ஏற்பட்டவை என்று குறிப்பிட்டுள்ள அவர், மருத்துவர்களை நியமிக்காமல் சுகாதரத்துறை அமைச்சர் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்றும் கேள்வி எழுப்பினார்.

உயிரிழந்த சிறுவன் குடும்பத்திற்கு மாநில அரசின் சார்பில் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்…

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்றும் ஏராளமானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

இன்று மட்டும் 85 லட்சத்திற்கும் அதிகமானோர் நீராட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை 49 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் நீராடிஇருப்பதன் மூலம் பிரயாக்ராஜ் மகா கும்பமேளா 4 கின்னஸ் சாதனைகளைப் படைக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஹரியானா மாநிலத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான பயிற்சி அரங்கம் சண்டிகரில் இன்று நடைபெற்றது.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா இதில் பங்கேற்று, சட்டப்பேரவை விதிமுறைகள் மற்றும் உறுப்பினர்கள் நடந்துகொள்ள வேண்டிய விதம் குறித்து விளக்கமளித்தார்.

மாநில முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி உள்ளிட்டோர் இந்தப் பயிற்சி அரங்கில் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

வதோதராவில் நடைபெற உள்ள முதல் ஆட்டத்தில் குஜராத் - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

அடுத்த மாதம் 15ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டிகள், பெங்களூரு, லக்னோ, மும்பை ஆகிய இடங்களிலும் நடைபெற உள்ளது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ஒடிசா அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

--------------

மனாமா சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய்சுந்தர் பிரசாந்த் இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

தில்லி ஓபன் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்த்தில் இந்தியாவின் நிக்கி கலியந்தா - ஜிம்பாப்வேயின் **Courtney John Lock** இணை, இங்கிலாந்தின் **Jay Clarke** – டென்மார்க்கின் **Johannes** இணையை எதிர்கொள்கிறது.

-------------

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் நடைபெற்ற தமிழக அளவிலான யோகாசனப் போட்டியில் நாமக்கல் மாவட்ட மாணவர்கள் முதலிடத்தையும், சேலத்தைச் சேர்ந்த மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் பிடித்தனர்.

**<<<<The End>>>>**